**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of civil procedure)**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**

**KEERANUR**

**CASE NO.OS.No. 120/2021**

**Deposition of witness of Plaintiff – P.W.1(முருகேசன்)**

**30.1.2024**

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

நானும் பிரதிவாதிகளும் தனித்தனியாக குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான் எனது அப்பா இருக்கும் வரை ஒன்றாக இருந்தோம் அதன் பிறகு தனித்தனியாக வசித்து வருகிறோம். மூக்கன்அம்பலம் தான் தாவா சொத்தை புதுக்கோட்டை நிலவள வங்கியில் அடமானமாக வைத்து கடன் வாங்கினார் என்றால் சரிதான். அந்த கடனை எனது தகப்பனாருக்கு பிறகு 2ம் பிரதிவாதி தான செலுத்தி வந்தார் என்றால் எனது அப்பா இறந்த பிறகு அது தள்ளுபடி ஆகிவிட்டது. அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆவணத்தை கேட்டோம் நிலவள வங்கியில் தரவில்லை. நான் சொல்லியது போல் கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை ்என்றும் அவ்வாறு தள்ளுபடி செய்யபட்டிருந்தால் ஆவணம் தாக்கல் செய்து இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. கடனை கட்ட சொல்லி வங்கியிலிருந்து அறிவிப்பு வந்த பிறகு 2ம் பிரதிவாதியின் மனைவி பாக்கியத்தின் நகையை அடமானம் வைத்தும் அவரது பெற்றோர் வீட்டில் இருந்து கொடுத்த பணத்தை வைத்தும் கடன் அடைக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 பத்திரத்தில் முன்கடனை தீர்ப்பதற்காக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முன்கடனை தீர்ப்பதற்காகதான் 2 மற்றும் 6 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பூர்வீக பொது குடும்ப சொத்தில் எங்களுக்கு நேரடி பாகம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள பாகவீதம் தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி பிரதிவாதிகள் எந்த காலத்திலும் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**